★ காஞ்சிபுரம்
★ ரெயின் போ பெனாரிஸ்
★ டபிள் செற் பின் பெனாரிஸ்
★ மைசூர் சில்க்ஸ்
★ காயத்திரி சில்க்ஸ்
★ பட்டு வேட்டிகள்
மற்றும் சகல விதமான பட்டுப் புடைவைகளுக்கும்
ராசி பட்டுச் சோலை
70, 71A, சிறப்பு அங்காடி நவீனசந்தை, யாழ்ப்பாணம்

பக்கங்கள் ஆறு

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் பிரதேசசபை

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மங்கள வைபவங்களுக்கு ஏற்ற பட்டுப் புடைவைகள் மற்றும் சகல விதமான ரெடிமேற் வகைகளுக்கு
ராசி சில்க்ஸ்

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆவணி 03 வெள்ளிக்கிழமை (19 - 08 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 265

# சந்திரிகா இன்று பிரதமராக பதவியேற்பு; அமைச்சரவையும் உடன் அமைக்கப்படும்

## புதிய எம். பிக்கள் 25 இல் பதவி பிரமாணம் செய்வர்

கொழும்பு, ஓகஸ்ட் 19

ஸ்ரீலங்காவின் புதிய பிரதமராக, பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பிரதித் தலைவர் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா, இன்று காலை பத்து மணி பதினான்கு நிமிட நேரத்தில் பதவி ஏற்கிறார்.

அதனைத் தொடர்ந்து பொ. ஐ. முன்னணி அரசின் அமைச்சர்களும் நியமிக்கப்படுவர். அவர்களும் இன்றே ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொள்வர்.

பொதுத்தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள், இம்மாதம் 25 ஆம் திகதி சபை அங்குரார்ப்பணம் செய்யப்படும் போது பதவியேற்பார்கள்

புதன்கிழமை இரவு பத்து மணியளவில் சந்திரிகா, ஜனாதிபதி விஜேதுங்காவைச் சந்தித்து —

புதிய அரசு அமைக்கக் கூடிய பலம் தமக்கு இருப்பதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்தே —

அவரை அரசாங்கம் அமைக்குமாறு அழைக்க ஜனாதிபதி முடிவு செய்தார்

(6 ஆம் பக்கம் பார்க்க)



## ஊரடங்கை நீக்க சந்திரிகா கோரிக்கை

கொழும்பு, ஒக. 19

நாட்டில் உள்ள ஊரடங்குச் சட்டத்தை இன்று முதல் அகற்றும்படி சந்திரிகா குமாரணதுங்கா நேற்று முன்தினம் இரவு ஜனாதிபதியைக் கேட்டுக் கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-எ-6)

## இன்று முதல் இரவு நேர ஊரடங்கு

கொழும்பு, ஒக. 19

நாடு முழுவதும் தற்போது அமுலில் உள்ள ஊரடங்குச் சட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 5-00 மணிக்கு நீக்கப்படும் எனவும் —

மறு அறிவித்தல் வரை தினமும் இரவு 9-00 மணி தொடக்கம் மறுநாள் காலை 5-00 மணி வரையும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் எனவும் ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (இ-4)

## அளவெட்டி பகுதியிலும் ஷெல்

நேற்று அதிகாலை 4.00 மணியளவில் மாதகல் இராணுவ முகாமில் இருந்து அளவெட்டி, கீரிமலை, பண்டத்தரிப்பு ஆகிய பகுதிகளை நோக்கி 10 க்கு மேற்பட்ட ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. (இ-13)

## ஆட்சியை நீடிக்க காமினி முயன்றார்

### ரணில் விட்டுக் கொடுக்கவில்லை

கொழும்பு, ஒக. 19

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியிடம் ஆட்சியைக் கையளிக்காமல் இருப்பதற்கு காமினி திஸாநாயக்கா திரைமறைவு நடவடிக்கைகளை மேற்கொண்டார் என்றும் —

அதற்கு ரணில் விக்கிரமசிங்கா இடமளிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பெரும்பான்மையைப் பெற்றுள்ள பொதுமக்கள் ஐக்கிய முன்னணியிடம் ஆட்சியை ஒப்படைக்காது ஆட்சியை தவறான வழியில் ஐக்கியதேசியக் கட்சி பெற்றுக் கொள்வதற்கு முயற்சிப்பது பொருத்தமற்றதாகும் என்றும் —

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு நாட்டு மக்கள் பெரும்பான்மையை வழங்கியுள்ளதினால் எழுந்துள்ள யதார்த்த நிலையை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் பிரதமர் ரணில் ஜனாதிபதிக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி செயலகம் அறிக்கை

கொழும்பு, ஒக. 19

புதிய பிரதமரும் அமைச்சர்களும் இன்று வெள்ளிக்கிழமை பதவிப் பிரமாணம் செய்து கொள்வார்கள் என்று ஜனாதிபதி செயலகம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தல் பெறுபேறுகள் அறிவிக்கப்பட்டுள்ளன என்றும் —

கட்சிகளின் நிலைவரம்பற்றி பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

சில மாவட்டங்களில் விருப்புத் தெரிவு வாக்குகள் எண்ணப்படுவது இன்னும் முடிவடையவில்லை என்று —

இதனால் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகிய எம். பிக்களின் பெயர்ப்பட்டியல் வியாழன் மாலைக்கு முன்னர் வெளிவரும் சாத்தியம் இல்லை என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவித்தல் தேர்தல் ஆணையாளரினால் வெளியிடப்பட்ட பின்னரே புதிய பிரதமரும் அமைச்சர்களும் நியமிக்கப்படுவர் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (இ-எ)

"விமானத்தை அனுப்புகிறோம் கொழும்பு வாருங்கள்"

## அஷ்ரப்பை வளைத்துப்பிடிக்க ஐ.தே.க. கடைசிவரை முயற்சி

### ஆனால் இறுதியில் எல்லாம் புஷ்வாணம்

கொழும்பு, ஒக. 19

நேற்று முன்தினம் தேர்தல் முடிவுகள் முழுவதும் வெளியான நிலையில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உதவியுடன் அரசாங்கம் அமைக்கும் முயற்சியில் ஐக்கிய தேசியக் கட்சி முழு மூச்சுடன் ஈடுபட்டிருந்தது.

இதற்காக அதன் தலைவர் அஷ்ரப்பை ஐ. தே. கட்சியினர் வளைத்துப் பிடிக்க முற்பட்டனர். ஆனால் அவர்களது முயற்சி புஷ்வாணமாகி விட்டது.

இது தொடர்பாக பி.பி.ஸியைச் சேர்ந்த ஆனந்தி அஷ்ரப் அளித்த பேட்டி கேள்வி பதில் வடிவில் கீழே தரப்பட்டுள்ளது.

கேள்வி:- பொதுமக்கள் ஐக்கிய முன்னணி இப்போது பதவிக்கு வரும் என்பது நிச்சயமாகியிருக்கிறது. ஆனால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை ஐ. தே. க. அணுகியதாக செய்திகள் அடிபட்டன. இந்த செய்தியில் ஏதேனும் உண்மை இருக்கிறதா?



பதில்:- ஐக்கிய தேசியக் கட்சி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை அணுகியது என்பது உண்மை தான். ஆனால் நேற்று கம்பாறை மாவட்டத்திலே இறுதி தேர்தல் முடிவுகளின் பின்பு வெற்றி பெற்ற வேட்பாளர்களின் தெரிவு வாக்குகள் எண்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா அரசை ஆதரிப்பதற்கு கூட்டணி - புளொட் இணக்கம்

கொழும்பு, ஒக. 19

சந்திரிகா குமாரணதுங்க ஜனாதிபதியை நேற்று முன்தினம் இரவு சந்திப்பதற்கு முன்பு — தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களையும் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) தலைவர்களையும் சந்தித்துப் பேசினார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இச்சந்திப்பின் போது இரு கட்சிகளும் சந்திரிகா புதிய அரசாங்கம் அமைக்க ஆதரவளிக்க இணக்கம் தெரிவித்தன. அதன் பின்னரே சந்திரிகா தர்மசிறி சேனநாயக்காவுடன் சென்று ஜனாதிபதியைச் சந்தித்து தமக்கு புதிய அரசு அமைக்க நாடாளுமன்றப் பெரும்பான்மை இருப்பதாகத் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து சந்திரிகாவை அரசு அமைக்க அழைப்பதற்கு ஜனாதிபதி இணங்கினார் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ-6)

## சந்திரிகாவின் கூற்றுக்கு புலிகள் தரப்பில் வரவேற்பு

### இந்திய வானொலி தகவல்

கொழும்பு, ஒக. 19

ஸ்ரீலங்காவின் புதிய பிரதமராகப் பதவியேற்கவிருக்கும் திருமதி சந்திரிகா குமாரணதுங்க நாட்டின் இன மோதலைத் தீர்க்க பேச்சுவார்த்தை நடத்த விருப்பம் தெரிவித்ததை தமிழீழ விடுதலைப் புலிகள் வரவேற்றுள்ளனர்.

லண்டனில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒரு பேச்சாளரான திரு. அன்ரனி ராஜா பி. பி. ஸி. தொலைக்காட்சி சேவைக்கு இவ்வாறு தெரிவித்தார் என இந்திய வானொலி அறிவித்தது.

## சில இடங்களில் கடைகள் எரிப்பு

### பெரிய அளவில் சம்பவங்கள் இல்லை

கொழும்பு, ஒக. 19

சிறு அசம்பாவிதங்களைத் தவிர கடந்த 24 மணி நேரத்தில் நாட்டில் அமைதி நிலவியதாக பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் கே. சந்குணராஜா நேற்று மாலை தெரிவித்தார்.

மாத்தளை, கன்னப்பொல ஆகிய பட்டினங்களில் சில கடைகளுக்குத் தீ வைக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. பொலீஸார் தொடர்ந்தும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் — என்று அவர் மேலும் கூறினார். (இ-ஐ)

## முச்சந்தி முனி



ஆட்சி கவிழ்ந்த பின்பும் போட்டி தணியவில்லை பாருங்கோ.........!

## கண்காணிப்பு குழு அறிக்கை

கொழும்பு, ஒக. 19

நடந்து முடிந்த பொதுத் தேர்தல் தொடர்பான தமது கண்காணிப்பு அறிக்கையை சர்வதேச அவதானிகள் குழு இன்று வெள்ளிக்கிழமை தேர்தல் ஆணையாளரிடம் கையளிக்க இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

44 உறுப்பினர்களைக் கொண்ட இக்குழுவின் தலைவராக அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த திரு. மக்ஃபார்லேன் பணிபுரிகிறார். (ஐ-எ)

## ஆகக் கூடிய வாக்குகள் பெற்று சந்திரிகா சாதனை

கடந்த செவ்வாய் நடைபெற்ற பொதுத் தேர்தலில் நாட்டிலேயே ஆகக் கூடிய விருப்புத் தெரிவு வாக்குகளாக 4 லட்சத்து 66 ஆயிரத்து 588 வாக்குகளைப் பெற்று புதிய பிரதமராக இன்று பதவியேற்கும் சந்திரிகா சாதனை படைத்துள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட ஸ்ரீமவி அத்துலத்முதலி 1 லட்சத்து 48 ஆயிரத்து 787 விருப்புத் தெரிவு வாக்குகளை பெற்றுள்ளார். (இ-எ-6)

# யுத்தத்தை நிறுத்தி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவே மக்கள் வாக்களிப்பு

## வாசுதேவ நாணயக்காரா பி.பி.ஸிக்கு பேட்டி

கொழும்பு, ஒக. 19

யுத்தத்தை நிறுத்திவிட்டு இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் —

வடக்கு - கிழக்கு யுத்தத்திற்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கும் - பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு தெளிவான அனுமதியை, ஐக்கிய தேசியக் கட்சியின் கடும்போக்கான இனவெறிப் பிரச்சாரத்துக்கு மத்தியிலும் நாட்டுமக்கள் வழங்கியுள்ளனர்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் எம். பியாகத் தெரிவு செய்யப்பட்ட வாசுதேவ நாணயக்காரா முன்னர் கண்டவாறு பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

..தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கும் அவர்களின் அபிலாஷைகளுக்கும் ஏற்ற விதத்தில் அரசியல் தீர்வு காணுவதற்கு மிகப் பெரும்பான்மையான சிங்கள மக்கள் அனுமதி வழங்கியுள்ளனர். இத்தகைய இரத்தினபுரி மாவட்டத்தில் .... விருப்பு வாக்குகள் வெளிப்படுத்துகின்றன.

..தமிழ் மக்களின் தாயகத்தை வலியுறுத்திய எனது தொலைக்காட்சி உரையை அரசு பெரிது படுத்தி இனவாதத்தைப் பரப்பியது. அவ்வாறே அஷ்ரப் — சந்திரிகா தேர்தல் உடன்பாட்டையும் இனவாதத்துக்கு அரசு பயன்படுத்தியது.

"ஆனால் இவற்றை மக்கள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

சந்திரிகாவுடன் தொடர்பு கொள்ள

## ஈ. பி. டி. பியின் முயற்சி தோல்வி

கொழும்பு, ஒக. 19

இன்று பிரதமராகப் பதவி ஏற்க உள்ள சந்திரிகாவுடன் தொடர்பு கொள்வதற்கு ஈ. பி. டி. பி. இயக்கத்தின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சிகள் கைகூடவில்லை.

இப்படி பி. பி. ஸி நேற்றுத் தெரிவித்தது.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 9 ஆசனங்களைக் கைப்பற்றிய ஈ. பி. டி. இயக்கத்தின் தலைவர் டக்ளஸ் தேவா

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதிய வைத்திய வசதிகள் இன்றி வடமராட்சி கிழக்கில் மக்கள் பாதிப்பு

## இரு கிராம வைத்தியசாலைகளிலும் ஒரு டாக்டரே சேவை

வடமராட்சி, ஓ. 19

வடமராட்சி கிழக்கிலுள்ள இரு கிராம வைத்தியசாலைகளிலும் வைத்திய அதிகாரிகள் பற்றாக்குறையினால் மட்டுப்படுத்தப்பட்ட வைத்தியசேவைகள் இடம்பெற்று வருகின்றன.

இதனால் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள பொதுமக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்குப் பகுதியின் கேந்திர நிலையமான மருதங்கேணி கிராம அரசினர் வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி நீண்டகால விடுமுறையில் சென்று இன்னமும் கடமைக்குத் திரும்பவில்லை.

இதனால் வடமராட்சி கிழக்கிலுள்ள அம்பன் கிராம அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி, தினமும் பிற்பகல் 1 மணி முதல் 5 மணி வரை மருதங்கேணி கிராம அரசினர் வைத்தியசாலையிலும் —

தினமும் காலை 8 மணி முதல் 12 மணிவரை அம்பன் அரசினர் கிராம வைத்தியசாலையிலும் — கடமையாற்றி வருகிறார்.

இதனால் இப்பகுதி நோயாளர்கள் அம்பனில் பிற்பகலிலும், மருதங்கேணியில் முற்பகலிலும் சிகிச்சைபெற முடியாமலுள்ளது.

இந்நிலையில், மருதங்கேணி கிராம அரசினர் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்திய அதிகாரி ஒருவரை நியமித்து முழுநேர வைத்திய வசதிகளை செய்து தருமாறு இப்பகுதி மக்கள் கோரிவருகின்றனர். (இ-173)

## உற்பத்திப் பொருள்களின் லேபலில் முழு விவரமும்

கல்வியங்காடு, ஓ. 19

மென்பானங்கள், ஜாம் போன்றவற்றைத் தயாரிக்கும் உற்பத்தி நிறுவனங்கள், அவற்றின் லேபலில் அவற்றைத் தயாரிக்கும் நிறுவனத்தின் பெயர், முகவரி ஆகியவற்றை குறிப்பிடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன் உற்பத்தி செய்யப்பட்ட திகதி, முடிவடையும் திகதி, அவற்றில் சேர்க்கப்பட்ட மூலப் பொருள்கள் போன்ற விபரங்களையும் தெரிவிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட வர்த்தக சங்கங்கள் கலந்து கொண்ட சந்திப்பு ஒன்றில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

## 2 தமிழ் பெண்கள் ஜேர்மனியில் பலி

கொழும்பு ஓ. 19

கோப்பாயைச் சேர்ந்த சகோதரிகள் இருவர் கடந்த 15ஆம் திகதி ஜேர்மனியில் அகாலமரணமடைந்ததாக இலங்கை வானொலி அறிவித்தது.

கோப்பாயைச்சேர்ந்த பழனிவேல் தவராஜா என்பவரின் மனைவியான பாக்கியவதி, சகோதரியான உமா ஆகிய இருவருமே அகாலமரணமடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவர்களது அகால மரணத்துக்கான காரணம் எதுவும் தெரியவரவில்லை. (ஐ-1)


### காரைநகர் சிதம்பராமூர்த்தி கோயில் ஆவணி ஓண திருவிழா

காரைநகர் சிதம்பராமூர்த்தி கேணிபடி கோயில் ஆவணி ஓண திருவிழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம்

பேருந்து நிலைய ஞான வைரவர் கோயிலில்

1008 சங்காபிஷேகமும் விசேட பூஜையும் 20-08-1994 சனிக்கிழமை காலை 7-00 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெற உள்ளன. அத்தருணம் விசேட தவில் வித்துவான்கள் (ஈழத்தின்) மங்கல இசை பொழிவார்கள்

அத்துடன் சமய சொற்பொழிவும் இடம்பெறும்

1008 சங்காபிஷேக நிகழ்ச்சியை தா. மகாதேவா குருக்கள் தலைமையில் சங்கர நாராயண குருக்கள் நடத்தி வைப்பார்.

அத்தருணம் ஞான வைரவர் அடியார்களை வந்து இஷ்ட சித்திகளை பெற்று செல்லுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

விசேட தவில் நாதஸ்வர கச்சேரிகள்

| தவில் | நாதஸ்வரம் |
|---|---|
| K. நித்தியானந்தம் | N. K. பத்மநாதன் |
| T. உதயசங்கர் | S. சிதம்பரநாதன் |
| N. R. [illegible] | N. K. கணேசன் |
| N. K. வீராச்சாமி | S. சுதந்திரன் |
| N. R. ரவீந்திரன் | N. R. சந்தானகிருஷ்ணன் |
| K. சிவகுமார் | A. முருகானந்தம் |
| P. ரவி | P. ரஜீவன் |
| A. முருகானந்தம் | A. மகேந்திரன் |
| S. பழனிவேல் | |

✱ தெய்வீகப் பேருரை

விடயம்:

'ஓணத்தான் உலகாளும் என்பார்களே'

நிகழ்த்துபவர்:
மணிமொழி வாரி செஞ்சொல்வாணர்
அருள் மொழிச் செல்வர்
க. நாகேஸ்வரன் எம். ஏ.

★ பிற்பகல் 1மணிக்கு அன்னதானம் வழங்கப்படும்

இங்ஙனம்,
சி. மு. கேணியடி இளைஞர்கள்,
காரைநகர்,

[32469]


## பொ. ஐ. மு. தேசியப்பட்டியலில் சிறிமாவோ மைத்திரி அலவி

கொழும்பு, ஓ. 19

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேசியப் பட்டியல் மூலம் எம்.பியாகும் வாய்ப்பு 14 பேருக்கு கிடைத்துள்ளது.

தேர்தல் நியமனதினத்தன்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பித்த தேசியப் பட்டியலில் இருந்து இவர்கள் எம்.பிக்களாக நியமிக்கப்படுவர்.

29 உறுப்பினர்களைக் கொண்ட அப்பட்டியலில் இடம்பெற்ற முதல் 14பேரின் பெயர்கள் வருமாறு:

### தமிழர் ஒருவருக்கும் எம். பி பதவி

சிறிமாவோ பண்டாரநாயக்கா
தர்மசிறி சேனநாயக்கா
கே. பி. இரத்னாநாயக்கா
மைத்திரிபால சேனநாயக்கா
பேராசிரியர் ஜி. எல். பீரிஸ்
அலவி மௌலானா
லக்ஷ்மன் கதிர்காமர்
கே. பி. சில்வா
பட்டி வீரக்கோன்
ஏ. ஆர். எம். ஹனீபா
கே. குணசேகரா
காமினி பொன்சேகா
ரவீந்திர கருணநாயக்கா
லை. பீ. டி. சில்வா

### ஆலயங்களில்

கரும்பிராய் வடக்கு பேய்ச்சி அம்மன் கோயிலில் நாளை சனிக்கிழமை மஹா கும்பாபிஷேக தின சங்காபிஷேகம் இடம்பெறும்.

★ ★ ★

பனிப்புலம் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் கோயிலில் 1008 சங்காபிஷேகமும், மணவாளக் கோலத் திருவிழாவும் இன்று (வெள்ளி) காலை 7 மணி முதல் நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

கொடிகாமம் கோயிலாமனை மருதடி முனீஸ்வரர் கோயில் நவக்கிரக கும்பாபிஷேகம் இன்று வெள்ளி நடைபெறவுள்ளது. (ஐ-117)

★ ★ ★

மட்டுவில் வடக்கு நெசவு நிலையத்தடி காளி கோயிலில் இன்று காலை மணவாளக் கோல திருவிழா நடைபெறும். (ஐ 31)

★ ★ ★

ஆனைக்கோட்டை சம்பந்தப்பிள்ளையார் கோயிலில் இன்று (வெள்ளி) வரலட்சுமி விரத விழா இடம்பெறும். (ஐ 100)

### மிரட்டல் காரணமாக

## பலாலி முகாமை தாக்கிய புலிகளின் நோக்கம் என்ன?

### அதிகாரிகள் பலதரப்பட்ட கருத்து

கொழும்பு, ஓ. 19

பலாலி விமானத்தளம் மீது அண்மையில் கரும்புலிகள் நடத்திய தாக்குதல் குறித்து விமானப்படை வட்டாரங்களில் பல விதமான கருத்துகள் வெளியிடப்பட்டுள்ளன.

பலாலி விமானத்தளத்தின் ஓடுபாதையில் நிறுத்தப்பட்டிருக்கும் படை விமானங்களையும் தொலைத்தொடர்பு கோபுரத்தையும் தாக்கி அழித்துவிட்டு, ஹெலிக்கொப்டர் ஒன்றை பலவந்தமாக எடுத்து அதில் பறந்து செல்வதே கரும்புலிகளின் திட்டமாக இருந்திருக்கலாம் என்ற ஒரு கருத்து விமானப்படை அதிகாரிகள் மத்தியில் நிலவுவதாக 'சண்டே ஐலண்ட்' பத்திரிகை வெளியிட்டிருக்கிறது.

எனினும் அப்படியான தாக்குதலை நடத்தும் திறமையை விடுதலைப்புலிகள் பெற்றிருக்கவில்லை என்று சிலரினால் தெரிவிக்கப்பட்டது.

அப்படியான திறமையை விடுதலைப்புலிகள் குறுகிய காலத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என்று வேறு சில அதிகாரிகள் கருதுகின்றனர்.

ஹெலிக்கொப்டர் ஒன்றைச் செலுத்துவதற்கு ஐந்து பறக்கும் மணித்தியாலங்கள் பயிற்சிபெற்றால் போதுமானது என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (இ-எ)

### அருள் கனி நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓ. 19

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரால் "அருள் கனி" என்னும் நூல் இன்று (வெள்ளி) பிற்பகல் 3 மணிக்கு ஆலய முன்றிலில் வெளியிடப்படவுள்ளது. சிவஸ்ரீ கை. தமசியாயக் குருக்கள் வெளியீட்டு விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

சந்நிதி முருகன் கோயிலின் வரலாறு, அற்புதங்கள் உட்பட சிறப்புக்கட்டுரைகள் பல அந்த நூலில் இடம்பெற்றுள்ளன. (ஐ)

### சிரமதானம்

வல்வெட்டித்துறை, ஓ. 19

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள பன்னிதவர் தாயியும் அதனுடன் அமைந்துள்ள திருவில் குளமும் வல்லையில் உள்ள அனைத்து விளையாட்டுக்கழகங்களினால் சிரமதான அடிப்படையில் புனரமைக்கப்பட்டு வருகின்றன. (இ-155)

### யாழ். நகரை அதிர வைத்த மண்டைதீவு ஷெல்

யாழ்ப்பாணம், ஓ. 19

மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்து நேற்று நண்பகல் 12-30 மணிக்கு யாழ்ப்பாணம் கரையோரப் பகுதிகளை நோக்கி கடுமையான ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

குருநகர், கோட்டை, கொட்டடிப் பகுதிகளிலும், யாழ். ஆஸ்பத்திரி பாதுகாப்பு வலய எல்லைப் பகுதிகளிலும் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

யாழ்நகர், யாழ். கரையோரப் பகுதிவாழ் மக்கள் இச்சம்பவத்தால் பெரும்பதற்றத்துடன் காணப்பட்டனர். (இ-4-15)

## 400 தொன் விதை கிழங்கு

யாழ். மாவட்ட விவசாய திணைக்களம் இவ்வாண்டு காலபோக செய்கைக்கென 400 மெற்றிக் தொன் விதை உருளைக்கிழங்கை கொழும்பில் இருந்து எடுத்துவர நடவடிக்கை எடுத்துள்ளது.

"டினாசறி" என்ற இனத்தை சேர்ந்த விதை உருளைக்கிழங்கே இம்முறை எடுத்து வரப்படவுள்ளது.

சென்ற ஆண்டு 155 மெற்றிக் தொன் விதை உருளைக்கிழங் யாழ்.மாவட்டத்துக்கு கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்டது. (ச-17)

## தமிழரின் பாரம்பரிய சொத்துகளில் சித்தாந்தம் முதன்மையானதாகும்

### திருமறைக் கலாமன்ற இயக்குநர் தெளிவுபடுத்துகிறார்

குருநகர், ஓ. 19

திருமறைக் கலாமன்றம் சைவசித்தாந்த ஆய்வு வட்டத்தை இயக்குவது பற்றிய தவறான பார்வையை சைவ சமயத்தினரும், கத்தோலிக்கர்களும் கொண்டுள்ளனர். சித்தாந்தம் என்பது தமிழ் மக்களுடைய பாரம்பரிய சொத்துகளுள் முதன்மையானதாகும்.

இவ்வாறு தெரிவித்தார் திருமறைக் கலாமன்றஇயக்குநர் பேராசிரியர் வண. நீ. மரியசேவியர் அடிகளார்.

கடந்த மாத இறுதியில் யாழ். பிரதான வீதி, மன்றக்கேட்போர் கூடத்தில் நடைபெற்ற சைவ சித்தாந்த ஆய்வு வட்டத்தின் 5ஆம் ஆண்டு நிறைவு வைபவத்தில் கலந்து விளக்கம் அளிக்கையில் அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

வாகீசக் கலாநிதி கனக சபாபதி நாகேஸ்வரன் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

பேராசிரியர் வண. நீ. மரியசேவியர் அடிகள் தொடர்ந்து கூறியதாவது.

'சித்தாந்தத்தின் மூலாதாரம் என்றதும் கிரேக்கத்தை நினைப்போம். நவீன சூனிய வாதம் என்றதும் ஜேர்மனியை எண்ணுவோம். பரதநாட்டியத்தை தென்னகத்துடனும், கதகளியைக் கேரளத்துடனும், குச்சிப்புடியை ஆந்திராவுடனும் மணிப்புரியை அஸ்ஸாமுடனும் ஒருங்குசேரக் கருதுவது போல் சித்தாந்தம் என்றவுடனே தமிழினத்தின் தனித்துவமான சொத்து என்ற முறையில் நமது பண்பாட்டை எண்ணுவோம்.

அதை நாம் மெய்யியல் நெறியில் நோக்கி உள்வாரா உணர்த்துவதற்கு முனைவோம். எந்தச்சமயத்தையும் விமர்சிப்பதோ, திறனாய்வு செய்வதோ எமது நோக்கமல்ல.

சமண மத இலக்கியமான சிந்தாமணியையும், பௌத்த மத இலக்கியமான மணிமேகலையையும் இன்னும் இதுபோன்ற பல்வேறு இலக்கிய சமய-வரலாற்று நூல்களையும் தமிழில் பேணி அது நமது இலக்கியம், வரலாறு என்போமாயின் சைவ சித்தாந்தமும் கவ்வழி எடுக்கப்பட வேண்டிய ஒன்றே ஆகும்! — என்றார்.

திரு. வே. யுகபாலசிங்கம், "திருக்களிற்றுப் படியார்" என்னும் பொருளில் கருத்துரை வழங்கினார்.


### இலவச மருந்தாளர் பயிற்சி [PHARMACIST COURSE]

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் அனுசரணையுடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையில் மேற்படி பயிற்சி நடைபெறவுள்ளது. பயில விரும்புவோர் தாம் வதியும் இலங்கை செஞ்சிலுவை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் மூலமாக தமது விண்ணப்பங்களை 25-08-94 க்கு முன்னதாக அனுப்பி வைக்கவும். நேர்முகப் பரீட்சை 27-08-94 மு. ப. 9.00 மணிக்கு கிளைத் தலைமையகத்தில் நடைபெறும். 0[illegible]-09-94 இல் பயிற்சி ஆரம்பமாகும். விண்ணப்பதாரியின் தகைமைகள்: க.பொ.த. (சா.த) பரீட்சையில் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், தமிழ் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் / க.பொ.த. (உ.த) பரீட்சையில் விஞ்ஞான பாடங்களில் சித்தியடைந்தோர் விரும்பத்தக்கது. வயதெல்லை 17 - 25, வறுமைக் கோட்டினை நிரூபிப்பவர்களுக்கு வயதெல்லை 26 - 30 பயிலுநருக்கு தேசிய பயிலுநர் சபையினரால் கொடுப்பனவு உண்டு.

கௌரவ செயலாளர்,
இ. செ. சி. சங்கம்,
யாழ். கிளை.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
18-08-94

(கி-8911)



### நல்லைக் குமரன் மலர் - 1994 விற்பனை

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் சைவசமய விவகாரக் குழுவினரால் இவ்வாண்டு வெளியிடப்பட்ட நல்லைக் குமரன் மலர் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் தேர்முட்டி வீதியில் அமைந்திருக்கும் மாநகர சபையின் சுகாதார அலுவலகத்தில் விற்பனையாகின்றது. பிரதி ஒன்றின் விலை ரூபா50/-

1993 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நல்லைக் குமரன் மலரும் சகாய விலையில் விற்பனை செய்யப்படுகின்றது. பிரதி ஒன்றின் தற்போதைய விலை ரூபா50/-

மேற்படி மலர்களை முருகன் அடியார்கள் ஒவ்வொருவரும் தவறாது பெற்று எமது சேவை தொடர ஒத்துழைப்பு நல்குமாறு வேண்டுகின்றோம்.

சைவசமய விவகாரக் குழு.
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

(சி/8908)



உ
அம்மன் துணை

### இன்று புதுக்கடைத் திறப்பு விழா

அன்புடையீர்!

நிகழும் பவ வருடம் ஆவணி மாதம் 3ஆம் திகதி (19-08-1994) வெள்ளிக்கிழமை காலை 8.05 மணி முதல் 09.17 மணி வரை ✱ வரு சுபமுகூர்த்தத்தில் ✱ 140, பிரதான வீதி, பருத்தித்துறையில் அமைந்துள்ள

சுகுணலக்ஷ்மி ஆடை அகம்
SUGUNALUXMY TEX

என்னும் புடைவை வியாபார ஸ்தாபனத்தினை ஆரம்பிக்க நிச்சயித்துள்ளோம். அத்தருணம தாங்களும் வருகை தந்து ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.



தங்கள் நல்வரை நாடும்:
திருமதி த. விஜயலக்ஷ்மி,

140. பிரதான வீதி,
பருத்தித்துறை.

[32468]


### ஓராண்டு நினைவலைகள்

மண்ணில்: 29 08 1974



விண்ணில்: 29 08 1993

உருத்திராபதி உதயகுமார்
(உதயன்)

திதி. 19 - 08 - 1994

இனிய உதயாவே!
காலத்தால் அழியாத
நம் பாச உணர்வுகள்
என்றும் உன் நினைவுடன்
உதயமாகும் தம்பி.

— குடும்பத்தினர்.

இராஜ வீதி,
கோப்பாய் தெற்கு.

(32467)


### நவாலியூர் முருக மூர்த்தி கோவில் பெரிய சப்பறத் திருவிழா

19 - 08 - 94

நிகழ்ச்சிகள்

மாலை 5.15 — விசேட சொற்பொழிவு
"இவள் உள் மெலிவே"
கம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்கள்

மாலை 6.15 — விசேட தவில் நாதஸ்வர இசை

கைதடி - பழனிமலை K. நித்தியானந்தன்
R. சிவகுமாரன் P. பழனிமலை
S. சிதம்பரநாதன் M. K. கணேசன்

இரவு 9.30 — "பட்டி மண்டபம்"

ஔவையார் பாடல்கள் பெரிதும் வலியுறுத்துவது
சமூக நீதிக் கருத்துக்களா? பக்திக் கருத்துக்களா?

த. சிவகுமாரன் (அம்பன் கழகம்)
K. நாகேஸ்வரன் (அம்பன் கழகம்)
K.S. முத்துலிங்கம் (ஆசிரியர்)
S. வேலாயுதம் (கல்விப் பணிப்பாளர்)
S. வாமன் (ஆசிரியர்)
J. கோக்கலே (ஆசிரியர்)

நடுவர்
திரு. பொன். கணேசமூர்த்தி (வங்கி)
(மண்ணுக்காக புகழ்)

எடிசன் அக்கடமி

(சி/8909)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடுவில் மகளிர் கல்லூரி
## பட்டப்படிப்புகள் பிரிவு

# G. A. Q. - 95
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

விரிவுரைகள்
**ஆரம்பம்: 20 - 08 - 94**
சனி 3 மணி

★ பேராதனைப் பல்கலைக்கழக G. A. Q. 95 விரிவுரைகள் நடைபெறுகின்றன.
★ யாழ்ப்பாணப் பல்கலைக்கழக B. A. (Part I), B. A. (Part II) விரிவுரைகள் நடைபெறுகின்றன.

-பதிவாளர்.
(சி/8890)



## கவரிமான் சேவை

* திருமண வைபவங்கள்.
* உள்ளூர் சுற்றுலாக்கள்
* கோவில் யாத்திரைகள்.

வேறு எதுவானாலும் குறைந்த செலவில் சிறந்த சொகுசுப் பிரயாணம் இன்றே நாடுங்கள்.

தலைவர் / பொதுமுகாமையாளர்,
பல, நோ. கூ. சங்கம்
யாழ்ப்பாணம்
நன்றி
(சி 8899)


## 22 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஜனனம்: 10 — 04 — 1935
மரணம்: 23 — 08 — 1972

### குலசிங்கம் கந்தையா B.Sc
(விஞ்ஞான ஆசிரியர், வேலாயுதம் மகாவித்தியாலயம்)
திதி. 19 — 08 — 1994

ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், மாமி, பேரன்.

"இந்திர கிரி"
இருப்பு மதவடி,
கரவெட்டி.
(7596)

## ஓராண்டு நினைவஞ்சலியும் ஆண்டுத் திதியும்



மண்ணில்: 03 — 09 — 1917
விண்ணில்: 29 — 08 — 1993

### அமரர் சின்னத்துரை சின்னத்தம்பி
திதி: திரயோதசி 19 - 8 - 94 (வெள்ளிக்கிழமை)

ஓராறு ஆண்டு சென்றாலும், உன் நினைவு மாறாதையா.

உற்றார், உறவினர், அயலவர், அன்புடையோர் யாவரும் அன்னாரின் நினைவஞ்சலியில் கலந்தும், மதியபோசனத்தில் பங்குகொண்டும் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்:

"தாயகம்",
195B, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(9288)

# நாட்டை பிரிக்கும் பிரசாரத்தை தென்பகுதி மக்கள் நிராகரித்தனர்

கொழும்பு, ஒ. 19
ஆளும் கட்சியின் நாட்டைப் பிரிக்கும் பிரசாரத்தை தென் பகுதி மக்கள் நிராகரித்து விட்டனர் என்பதை இத் தேர்தல் எடுத்துக்காட்டியிருப்பதாக யுக்திய ஆசிரியர் சுனந்த தேசப்பிரிய பி. பி. சிக்குத் தெரிவித்தார்.

அஷ்ரப்- சந்திரிகா ஒப்பந்தத்தைக் காட்டி பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நாட்டைப் பிரிக்கத் திட்டமிட்டிருப்பதாக வரைபடங்கள் மூலம் ஐ. தே. க. பிரசாரஞ் செய்தது.

இதன் மத்தியிலும் தென் மாகாணத்தில் உள்ள அனைத்து ஆசனங்களையும் முன்னணி கைப்பற்றியது.

வடக்கு - கிழக்கு யுத்தத்துக்கு அரசியல் தீர்வைக் காணவேண்டும் என்பதில் பெரும்பாலான சிங்கள மக்கள் காட்டும் ஆர்வத்தையே தேர்தல் முடிவுகள் புலப்படுத்துகின்றன.

"தமிழ் மக்கள் வாழும் பகுதிகள் ஒரு பிரதேசமாக்கப்படும். இப்போருக்கு அரசியல் தீர்வு காணப்படும்" - என்று இலங்கையின் அரசியல் சரித்திரத்திலேயே முதன் முறையாக உறுதியாகத் தெரிவித்த ஒரே ஒரு தலைவர் சந்திரிகா தான்.

வடக்கு - கிழக்கு எல்லைகளை மாற்றி அமைத்து புதிய மாகாணத்தை உருவாக்கும் யோசனைக்கு மக்கள் இத் தேர்தலில் அங்கீகாரமளித்துள்ளனர்.

—இவ்வாறு அவர் தெரிவித்தார்.
(எ-6)

## குடும்பஸ்தர் மரணம்

தென்மராட்சி, ஒ. 19
விறகு வெட்டி விட்டு சைக்கிளில் வீடு திரும்பிய குடும்பஸ்தர் வீதியில் மயங்கி வீழ்ந்து மரணமானார். இச்சம்பவம் கடந்த செவ்வாய் பளை இத்தாவில் பிரதான வீதியில் இடம்பெற்றது.

இயக்கச்சியிலிருந்து இடம்பெயர்ந்து வேம்போடுகேணியில் தங்கியிருந்த முத்தையா இராமகிருஷ்ணன் (வயது 39) என்பவரே மரணமடைந்தவராவார்.
(ஐ—117)

## நல்லூரில் கூட்டுறவு சங்க புதிய கிளைகள்

யாழ்ப்பாணம், ஒ. 19
நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆலய சுற்றாடலில் புதிதாக மூன்று விற்பனைக் கிளைகளை அமைத்துள்ளது.

கற்பூரம், அரிசி மா, பால் மாவகைகள், சீனி, வாளி என்பனவற்றுடன் உள்ளூர் உற்பத்திப் பொருள்களும் புடவைகளும் இக்கிளைகள் மூலம் நியாய விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.
(ஐ-4)

## புலிகளின் குரல் வானொலியில்

**19 – 08 – 1994**
வெள்ளி இரவு
★ 8-01 — கலைமஞ்சரி— நூல் அறிமுகம்: "வைகை" கவிதைத் தொகுதி; சிறுகதை — "சிரித்துக் கொண்டே அழுகிறான்" நிறைவாக கவிதை — "நாளைப் பொழுது பற்றி நாலு வரி"
★ 8-25 — கணப்பொழுது
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — அரசியல் அரங்கம்
★ 8-50 — வாத்தியகானங்கள்

**20 – 08 – 1994**
சனி காலை
★ 7-03 — மாவீரவணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## சேவை நலன் பாராட்டு விழா

சாவகச்சேரி, ஒ. 19
சாவகச்சேரி பிராந்திய தொலைக் கல்வி நிலையத்தில் போதனாசிரியர்களாக சேவை புரிந்து பதவி உயர்வு பெற்றுச் செல்லும் திரு. வ. சூரியநாதன், திரு ஐ. கணேசன், திருமதி எல். பரராஜசிங்கம், ஆகியோரின் சேவை நலன் பாராட்டு விழா கடந்த ஞாயிறன்று சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்தில் பயிலுநர் ஆசிரியர் எஸ். நாகேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் தென்மராட்சி கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஸ்பா - கணேசலிங்கம், தொலைக் கல்வி சிரேஷ்ட போதனாசிரியர் [illegible] ராசா உட்பட மற்றும் கல்வி அதிகாரிகளும் [illegible] வழங்கினர்.
(இ—31)

கோண்டாவில்
## ஆசிமட அரசடி விநாயகர் ஆலய மஹாலக்ஷ்மி அம்பாள் (உற்சவமூர்த்தி) நூதன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம்

**19 – 08 – 1994** வெள்ளிக்கிழமை காலை
8-35 — 9-05 மணிக்குள் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து 11 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்.

குறிப்பு:
வெள்ளிக்கிழமை மாலை வரலக்ஷ்மி பூஜையும், தொடர்ந்து தீப பூஜையும் நடைபெற்று அம்பாள் திருவீதி உலா வருவார்

கும்பாபிஷேக குரு:
"பிரதிஷ்டாமணி", "வேதாகம கிரியா ஜோதி" "ஆகம கிரியா திலகம்"
பிரம்மஸ்ரீ ந. சபாரத்தினக் குருக்கள்

தேவசிற்பாசாரியார்:
விஸ்வப் பிரம்மஸ்ரீ சோமசுந்தர ஸ்தபதி
கோண்டாவில், தாவடி.

- ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை.
கோண்டாவில் கிழக்கு.
[82441]

## கிறிஸ்தவ சேவா ஆச்சிரமம்
மருதனார்மடம் - சுன்னாகம்
## ஆச்சிரமத்தின் 55ஆம் ஆண்டு விழா

20 – 08 – 1994 சனிக்கிழமை நடைபெறும்
நண்பர்கள் யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றீர்கள்

நிகழ்ச்சி நிரல்;
காலை 7மணிக்கு
★ பரிசுத்த நற்கருணை ஆராதனை
காலை 9-30 மணிக்கு
★ நன்றி செலுத்தும் ஆராதனை
காலை 11மணிக்கு
கலை நிகழ்ச்சி
(பெரியண்ணன் மண்டபம்)
நண்பகல் 12மணிக்கு
★ மன்றாட்டு ஜெபம்
மாலை 3மணிக்கு
★ பகிரங்கக் கூட்டம்
உங்கள் நண்பர்களை அழைத்து வாருங்கள்!

வண. சேவக் சாமுவேல் தேவரட்ணம் அல்பிரட்.
(சாம் அண்ணன்).

கிறிஸ்தவ சேவா ஆச்சிரமம்,
மருதனார்மடம், சுன்னாகம்.
[இ-8900]


## COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE
4 MONTHS

ஆரம்பம்:
வார இறுதி வகுப்புகள்: **21-08-94** 10—30
வார நாள் வகுப்புகள்: **22-08-94** 10—30

Lectures by:
S. P. SIVAPATHASUNDARAM
M. I. D. P. M. (London)

★ கட்டணம் தவணை முறையில் மாதம் ரூபா 400/- மட்டுமே
★ Basic கற்கும் மாணவர்களுக்கு Lotus, Word Star பாடநெறிகளுக்கான கட்டணங்களில் சலுகை
★ அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ கூடிய செய்முறைப் பயிற்சி
★ பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்

## SCHOOL OF BUSINESS ADMINISTRATION
(Pioneers in Computer Education)
16, 3rd CROSS STREET, JAFFNA.
[இ-8907]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### YAMAHA MATE 50

நல்ல நிலையில் உள்ள Electronic Lancer Model மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. பார்வையிடும் நாட்கள் வெள்ளி, சனிக்கிழமைகள் மட்டும். தொடர்பு: 41, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். (32464)

### விற்பனைக்கு

வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அருகாமையில் கிணற்றுடன் கூடிய ஐந்து பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. நேரில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இல. 202, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (32450)

### சேவல்குஞ்சு விற்பனை

மூன்று கிழமைகள் வளர்ச்சியடைந்த கறுப்பு, பிறவுண் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. "மங்கிளாபதி" சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (32463)

### உற்சவகால விற்பனை

இந்திய, இலங்கை நாவல்கள் தொகையாகவும், சில்லறையாகவும், சைவம் நீதிக் கதைகள், 1, 2, 3, 4, 5, 6 பாகம் புதியவை. சமய புராணப் புத்தகங்கள், இந்திய சஞ்சிகைகள் விற்று முடிப்பதற்கான மலிவு விலையில் ஸ்ரீகாந்த புத்தகசாலை, நல்லூர். [இ-8678]

### தென்னம் நாற்றுக்கள்

உடன் நடுவதற்குகந்த நல்ல ரக தென்னம் நாற்றுக்கள் சாதாரணம், செவ்விளனி, வத்தாளி இளநீர் குறைந்த காலத்தில் பலன்தரக்கூடியவை விற்பனைக்குண்டு. மு. சாமிரேசு ஐயா கடையடி, மீசாலை. (32434)

### SLAS

SLAS பரீட்சைக்குரிய நுண்ணறிவு, கிரகித்தல், எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஆக்கியோன்: கலாநிதி க. குணராசா. (32400)

### தேவை

நல்ல முறையில் அப்பளம் செய்யக்கூடிய வேலையாள் தேவை. உடன் கடிதமூலம் தொடர்புகொள்ளவும். விளம்பர இல: 680, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (33391)

### மணிக்கூடுகள் தேவை

உதிரிப்பாகங்களுக்காக பாவித்த நல்ல நிலையில் உள்ள மணிக்கூடுகள் வாங்கப்படும். சகல மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்தப்படும். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். கிளைகள்: ஆறுகால் மடம் ஆனைக்கோட்டை, கண்டி வீதி, சாவகச்சேரி. (இ-8686)

### மணமகன் தேவை

நற்பண்புள்ள கிரகபாவம் குறைந்த 28 வயது பட்டதாரி ஆசிரியைக்கு 34 வயதிற்குட்பட்ட இந்தப் பண்புள்ள பட்டதாரி ஆசிரியர் தேவை. முழு விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். இல. 946. மே/பா. உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (7701)

### தவறிவிட்டது

கணபதிப்பிள்ளை தங்கம்மாவின் 357460751 V இலக்க அடையாள அட்டை 15-8-94 இல் ஆரியகுளம் சந்திக்கும் கொழும்புத்துறைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இ. செல்வராணி இல. 6, மூன்றாம் குறுக்குத் தெரு, கொழும்புத்துறை என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (32447)

### மணப்பெண் தேவை

வண்டனில் கணக்காளராகப் பணிபுரியும் 32 வயதுடைய றோமன் கத்தோலிக்க வரனுக்கு பெற்றோர் மணப்பெண் தேடுகிறார்கள். வண்டனில் உள்ள கிறிஸ்தவ மணப்பெண்ணும் விரும்பத்தக்கது. இல. 682, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (32443)

### திருமண சேவை

வெளிநாடு உள்நாடு அரச உத்தியோகம், டாக்டர், என்ஜினியர், அக்கவுண்டன், ஆசிரியர், ஆசிரியை ஜாதகம் எம்மிடம் உண்டு. முழுவிவரங்களுடன் ஜாதகத்துடனும் தொடர்பு கொள்க. "அபிராமி" துர்க்காதேவி தேவஸ்தான வீதி, சாவகச்சேரி. (32412)

### விரிவுரைகள்

உலக உலா பாணியில் அறிவியல் - பயன்தரும் விரிவுரைகள் உயர் கல்விமான்களால் நடத்தப்படுகிறது. தொடர்புகள்: யாழ். நகரில், அன்ரன் சிலவிக்கம், கன்ராஜ் வியாபாரம் 867, மின்சார நிலைய வீதி. அச்சுவேலியில் - திருச்செல்வம், இடமானுவேல் - சிமா உடையார் வளவு, அச்சநகர் 4, அச்சவேலி. (7605)

### அனுமதிப் பரீட்சை

ஆண்டு 5 மாணவர்களுக்கு பிரபல பாடசாலை அனுமதி பரீட்சைக்கான மாதிரி வகுப்புக்கள், 20 - 08 - 94 சனி பிற்பகல் 2.00 மணிக்கு ஆரம்பமாகின்றன. மாதிரி வினாத்தாள் 21 - 08 - 94 ஞாயிறு, வெளியிடப்படும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (32425)

## வாழ்த்துகிறோம்

"மூலநோய்களும் முறையான சிகிச்சைகளும்"

என்ற நூலை எழுதிய - இலங்கை சித்த ஆயுள்வேத மருத்துவக்கல்லூரியின் பழைய மாணவியும், பட்டதாரியுமான,

**செல்வி ஐ. மங்களாம்பிகை அம்மாள்**
(மங்களபதி)

அவர்களின் நூல் வெளியீட்டு விழாவிற்கு எங்கள் உளமார்ந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

வாழ்க வளமுடன் வளர்க.

அன்புடன்,
விரிவுரையாளர்களும், மாணவர்களும்,
இலங்கை சித்த ஆயுள்வேத மருத்துவக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(32466)

ஓம் விராட் விஸ்வப் பிரமணே நம!

## இன்று புதுக்கடைத் திறப்பு விழா



நிகழும் மங்களகரமான பவ வருடம் ஆவணித் திங்கள் 3ஆம் நாள் (19 - 08 - 1994) வெள்ளிக்கிழமை காலை 8·05 மணி முதல் 9 04 மணி வரை வரும் கன்னி இலக்கின சுப முகூர்த்தத்தில்,

**சந்தோஷம் தெரு,**
(கஸ்தூரியார் வீதி)
**194 ஆம் இலக்க கட்டடத்தில்**

# கணேசா நகையகம்



நிறுவனத்தை ஆரம்பிக்க திருவருள் கைகூடியுள்ளது அத்தருணம் வாடிக்கையாளர், நண்பர்கள் அனைவரும் சமுகம் தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
உரிமையாளர்கள்,
**ச. கணேசமூர்த்தி நகைத் தொழிலகம்,**
55, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

194, சந்தோஷம் தெரு (கஸ்தூரியார் வீதி), யாழ்ப்பாணம்.

[32449]

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| பூவுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 31 — 07 — 1975 | 10 — 09 — 1992 |

**செல்வன் ஆறுமுகம் சுகிர்தன்**

திதி: 19 – 08 – 1994

எம்மை யெல்லாம் தவிக்கவிட்டு
இறைவனடி சேர்ந்த எம் இதயத் தெய்வமே!
அன்னை இல்லத்தை விட்டுப்பறந்து
இன்று ஆண்டு இரண்டு ஆனதையா
ஆண்டுகள் பல சென்றாலும் உன் பிரிவை
எம்மால் தாங்க முடியாது செல்வமே!
கண்ணீர் மலர்களைக் காணிக்கை யாக்குவதன்று
வேறென்ன செய்ய முடியும் எம்மால்.

உன் ஆத்ம சாந்திக்காக இரவு பகல் வேண்டுகின்றோம்
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உன் பிரிவால் துயருறும்,
அப்பா, அம்மா, சகோதரிகள்,
மாமா, மாமிமார், சித்தப்பா, அன்ரி
மற்றும் சுற்றார், உறவினர்கள்.

"அன்னை இல்லம்",
கொண்டாவில் மேற்கு,
கொண்டாவில். (32454)

## இதோ அண்ணா
## இலகு தோசை மா

- ❊ அதிசயம்! ஆனால் உண்மை
- ★ அரைக்கத் தேவையில்லை
- ✶ மூச்சிளைக்கத் தேவையில்லை
- ❊ வெந்தயம், நற்சீரகம் மஞ்சல், இக்கலவையில் அடங்கியுள்ளன
- ★ கலவையைக் குழைத்து 3 மணி நேரம் வைத்த பின் தோசையைச் சுடலாம்
- ★ தோசையைச்சுடத் தொடங்குமுன் தேவைக்கேற்ப உப்பைச் சேர்த்துக்கொள்ளவும்

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்
(சி/8689)

## எடிசன் அக்கடமி

(யாழ். இந்துக்கல்லூரி அருகில்)
411/1, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

**பிரத்தியேக கணித வகுப்பு**

## O/L கணிதம்

ஆசிரியர்:
**திரு. B. P. பாஸ்கரன்**

Sat. & Sun. Class சனி - ஞாயிறு பி.ப. 3 மணி
Evening Class திங்கள் - வெள்ளி பி.ப. 5மணி

ஆரம்பம்: **21 - 08 - 1994** ஞாயிறு

★ பாடத்திட்டத்துடன் 18 வருட வினாக்கள் மீட்கப்படும்.

[இ-8887]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## மழை ஓய்ந்தும் தூவானம் விடாது...

ஸ்ரீலங்காவின் பொதுத் தேர்தலைத் தொடர்ந்து ஏற்படவிருந்த அரசியல் நெருக்கடி அதிர்ஷ்டவசமாகத் தவிர்க்கப்பட்டுள்ளது. தேர்தலில் அதிக ஆசனங்களைப் பெற்ற பொதுசன ஐக்கிய முன்னணி அரசை அமைக்குமாறு அழைப்பதில் ஜனாதிபதி தாமதம் காட்டி வந்தார்.

புதிய அரசமைப்பின் பிரகாரம், நாடாளுமன்றத்தின் நம்பிக்கை பெற்றவர் எனக் கருதுபவரையே தாம் புதிய அரசாங்கத்தை அமைக்குமாறு கேட்கப்போவதாக, ஜனாதிபதி புதன்கிழமை நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையின் போது குறிப்பிட்டமை நெருக்கடி மிகப் பலருக்கும் சந்தேகத்தை உண்டாக்கியது.

1972 அரசமைப்பிலும், அதற்கு முந்திய அரசமைப்புகளிலும் தேர்தலில் அதிக நாடாளுமன்ற இடங்களைப் பெறும் அணியின் தலைவரே புதிய அரசை அமைக்க அழைக்கப்பட வேண்டும் என்று விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் ஜே. ஆர். இயற்றிய எதேச்சாதிகார — சர்வாதிகார — அரசமைப்பு மக்கள் தீர்ப்புக்கு மதிப்பளிக்காமல், ஜனாதிபதி ஒருவர் தமது விருப்பப்படி தமக்குப் பிடித்த ஒருவரை பிரதமராக்க இடம் கொடுக்கிறது.

இதனைப் பயன்படுத்தி விஜேதுங்கா ஐக்கிய தேசியக் கட்சியின் சிறுபான்மை அரசு ஒன்றை அமைக்க முனையலாம் என்ற சந்தேகம் நேற்று காலை வரை நிலவியது.

முன்னாள் சபாநாயகர் எம். எச். முகம்மது உட்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் அரசமைக்கக் கூடிய நிலையில் இருப்பதாக கருத்து வெளியிட்டதால், ஜனாதிபதி விஜேதுங்கா மக்கள் தீர்ப்புக்கு முரணாக தமது சொந்தக் கட்சியை ஆட்சியில் அமர்த்தலாம் என்ற சந்தேகம் மேலும் வலுவடைந்தது.

அவ்வாறு நிகழ்ந்திருந்தால், ஸ்ரீலங்காவில் — தென்னிலங்கையில் — அரசமைப்பு, அரசியல் நெருக்கடிகள் மட்டுமன்றி பெரும் சிவில் யுத்தமே வெடித்திருக்கும். அதிர்ஷ்டவசமாக விஜேதுங்கா தமது மனதை மாற்றி மரியாதையான முடிவுக்கு வந்தார். பொதுசன ஐக்கிய முன்னணியை — சந்திரிகா குமாரதுங்காவை — அரசமைக்க அழைக்க முடிவு செய்திருக்கிறார்.

சந்திரிகா தலைமையில் பொதுசன ஐக்கிய முன்னணி நாடாளுமன்றம் அமைந்தாலும், அரசாங்கம் விஜேதுங்காவினுடையதாகவே இருக்கப் போகிறது. அரசுத் தலைவராகவும் அவரே விளங்குவார்.

அதனால் நாட்டின் முக்கிய - பிரதான பிரச்சினைகளான இன விவகாரம், பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் ஆகியனவற்றை தமது எண்ணப்படி சந்திரிகா அரசால் கையாள முடியாது.

அரச நிர்வாகத்துக்கு உயிர் மூச்சான நிதி, பாதுகாப்பு அமைச்சுகளை தொடர்ந்தும் தாமே வைத்திருக்க ஜனாதிபதி விரும்பினால் — அவ்வாறே செய்தால் — உடனடியாகவே இரு தரப்பாருக்கும் இடையில் முறுகல் நிலை தோன்றும்.

சந்திரிகாவின் புதிய அரசு தனது புதிய அரசியல்செயல் திட்டங்கள் நடைமுறைப் படுத்த முடியாது திண்டாட நேரிடும்.

புதிய நாடாளுமன்றக் கூட்டத்தொடரை வைபவரீதியாகத் திறந்து வைக்கும் போது சந்திரிகா அரசின் திட்டங்களையே விஜேதுங்கா அறிவிக்க வேண்டும். அப்போது அவர் தமது மனச்சாட்சிக்கு முரணாக, தனது கொள்கைகளுக்கு எதிரான சந்திரிகாவின் கொள்கைகளை அறிவிக்க நேரிடும்.

இவ்வாறு இரு சாராருக்கும் இடையிலான தகராறு தொடரவே செய்யும். விஜேதுங்கா ஜனாதிபதி பதவியில் இருந்து விலகினால் மட்டுமே இதனைத் தவிர்க்க முடியும். இல்லையேல் 1995 பெப்ரவரி வரை மழை ஓய்ந்தும் தூவானம் விடாத கதையாகவே தெற்கு அரசியல் கலங்கிக் குழம்பும்!

# பொ. ஐ. முன்னணி அரசாங்கம் உறுதியுடன் செயற்பட வேண்டும்!

## 'ராவய' ஆசிரியர் விக்டர் ஐவன் கருத்து

கொழும்பு, ஓக. 19

புதிய அரசை அமைக்கும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் புதிய தலைமை உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

'ராவய' ஆசிரியர் விக்டர் ஐவன் முன்கண்டவாறு தென் இலங்கை அரசியல் நிலைவரம் குறித்து கருத்து வெளியிட்டிருக்கிறார்.

அவர் மேலும் சொன்னதாவது;

எதிர்பார்த்த அளவு ஆசனங்களை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி கைப்பற்றாததற்கு பல காரணங்கள் உள்ளன.

தற்போதைய ஆட்சியை மாற்றி அமைக்க வேண்டும் என்ற ஆர்வம் மக்களிடம் காணப்பட்டது. அதனை சரியான முறையில் பாவிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க முன்னணியின் தலைமைத்துவம் தவறிவிட்டது.

முன்னணிக்கு உண்மையில் ஆற்றல்மிக்க புதிய தலைமை கிடைத்திருந்தது. ஆனால் முன்னணியின் ஏனைய பிரமுகர்கள் ஆர்வத்துடன் பணிபுரியவில்லை.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு எதிரான மிகமோசமான முறையில் ஆளும்கட்சியும் மக்கள் ஐக்கிய முன்னணியும் வகுப்புவாதப் பிரசாரம் செய்தன. இதில் மக்கள் ஐக்கிய முன்னணி முக்கிய பங்கு வகித்தது.

ஆளும்கட்சி அரசாங்க அதிகாரங்களை வெறெந்த அரசும் செய்யாத வகையில் இத்தேர்தலில் பயன்படுத்தியது. மக்கள் மனதில் மயக்கத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் அரசு தொடர்புசாதனங்களைப் பயன்படுத்தியது.

கண்டி மாவட்டத்தில் தேர்தல் முடிவுகள் வியப்பை அளித்துள்ளன. முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியினர் பயன்படுத்திய வேண்டத்தகாத முறைகள் இத்தேர்தலில் கைவிடப்பட்டிருந்தன எனச் சொல்லமுடியாது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பலமற்ற ஓர் அரசை அமைக்கப்போவது என்பது உண்மையே.

ஆயினும்— மிகக் குறுகிய காலத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளதால், அதில் வெற்றியடையக் கூடிய வாய்ப்பு பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு உண்டு. ஜனாதிபதித் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வெற்றியீட்டிய பின்னர் ஜனாதிபதி முறையை ரத்துச்செய்வதுடன், அரசமைப்புச் சீர்திருத்தங்களையும் முன்னணி அரசு நிறைவேற்றும். பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு மீண்டும் தேர்தல் ஒன்றை நடத்தும் வாய்ப்பு முன்னணி அரசுக்குக் கிடைக்கும்.

தற்பொழுது கிடைத்துள்ள வெற்றியினால் சுதந்திரக் கட்சியின் புதிய தலைமைத்துவத்தின் பிடி உறுதியாக வேண்டும்.

இத்தேர்தலில் ஐ. தே. க. இனவாதப் போக்கைக் கடைப்பிடித்தது. முன்னணி அடையவிருந்த பெருவெற்றியைத் தடுக்கவே இனவாதப் போக்கு பயன்படுத்தப்பட்டது.

ஆனால் மிகப்பெரும்பான்மையான மக்கள் இனவாதப் போக்கைப் புறக்கணித்துவிட்டனர்.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (எ-6)

# விகிதாசார தேர்தல் முரண்பாட்டை வெளிப்படுத்தும் யாழ். முடிவுகள்

## 23 வீத வாக்குகளே பதிவு

விகிதாசார பிரதிநிதித்துவ முறையிலும் முரண்பாடு உள்ளது என்பதை யாழ். மாவட்டத்தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்துகிறது.

பி. பி. ஸியின் சிங்களச் செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோ முன்கண்டவாறு தமது கண்ணோட்டத்தில் தெரிவிக்கின்றார்.

5 லட்சத்துக்கு அதிகமான வாக்காளர்களைக் கொண்ட யாழ். மாவட்டத்தில் 2.31 சதவீதத்தினரான சுமார் 13 ஆயிரம் வாக்காளர்கள் வாக்களித்து பத்து எம். பிக்களைத் தெரிவு செய்துள்ளனர்.

இதேவேளை — இரத்தினபுரி மாவட்டத்தில் 87.25 சத வாக்காளர்கள் வாக்களித்து 10 எம். பிக்களையே தெரிவு செய்துள்ளனர்.

இதில் இருந்து விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் உள்ள முரண்பாடு வெளிப்படுகிறது.

தேர்தல்தொகுதி முறையில் இத்தேர்தல் நடத்தப்பட்டிருப்பின் மூன்றில் இருபங்கு பெரும்பான்மையை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பெற்றிருக்கும்.

ஆனால் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் ஓர் ஆசனத்தை மட்டுமே பெற்ற கட்சி ஒன்றின் ஆதரவைப் பெறவேண்டிய நிலை பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு ஏற்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (எ-6)

# தெளிவான வெற்றியைப் பெறாத நிலையில் பொ.ஐ. முன்னணி அரசு

## பேராசிரியர் ஜயதேவ உயங்கொட

கொழும்பு, ஓக. 19

நடந்து முடிந்த தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி படுதோல்வி அடையவில்லை. பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் தெளிவான வெற்றியைப் பெறவில்லை.

பேராசிரியர் டாக்டர் ஜயதேவ உயங்கொட முன்கண்டவாறு கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

பேராசிரியர் ஜயதேவ உயங்கொட மேலும் பி.பி. ஸிக்கு தெரிவித்ததாவது;

நடந்த தேர்தலில் ஆளும் ஐ. தே. க. படுதோல்வி அடையவில்லை. இதனை கவனத்துக்கு எடுத்துக் கொள்ளவேண்டும். இதுபோன்றே பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் வெற்றியும் தெளிவற்றதொன்றாகும்.

டிசம்பருக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டியுள்ளது. இத்தேர்தலில் வெற்றியீட்டுவதற்கு முன்னணி அரசு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

இலங்கையில் எந்த அரசும் நாடாளுமன்றத்தில் மிகப் பெரும்பான்மை இன்றி சிறிய பெரும்பான்மை பெற்று இருப்பதையே நான் விரும்புகின்றேன்.

கடந்த காலத்தில் மிகப் பெரும்பான்மை பெற்ற அரசுகள் தான் தோன்றித்தனமாகச் செயற்பட்டுள்ளன.

முன்னணி அரசு சிறிய பெரும்பான்மையுடன் சில அரசியல் பிரச்சினைகளை எதிர்காலத்தில் எவ்வாறு சமாளிக்கப்போகின்றது?

ஐக்கிய தேசியக் கட்சியை குறைத்து மதிப்பிட முடியாது. சாதாரண அரசியல உறுதிப்பாட்டுடன் செயல்படும் அரசுக்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தற்போது பெற்றுள்ள பெரும்பான்மை போதாது என்று நான் கருதுகின்றேன்.

ஆயினும் — தங்களுக்குள்ள சிறிய பெரும்பான்மையை கொண்டாவது தங்களின் அரசியல் உறுதிப்பாட்டை எதிர்காலத்தில் பாதுகாத்துக் கொண்டு, சக்தியைப்பேணி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு மொதுமக்கள் ஐக்கிய முன்னணி தயாராக வேண்டும். இதில் பல அரசியல் பிரச்சினைகளை முன்னணி அரசு எதிர்கொள்ள நேரிடும்.

நாடாளுமன்றத் தேர்தல் முடிவுற்ற மூன்று மாதங்களுள் ஜனாதிபதித் தேர்தலை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு எதிர் நோக்கியுள்ளது.

மத்திய, சப்ரகமுவ, ஊவா மாகாணங்களில் எவரும் எதிர்பாராத வெற்றியை ஐ. தே. க. பெற்றுள்ளது. இதற்கு மலையக மக்களின் வாக்குகள் காரணமாக இருக்கக்கூடும். ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்ட பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு புதிய தந்திரோபாயங்களை, திட்டங்களை, வழிகாட்டுதல்களை வகுத்துக் கொள்ளவேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டுவது இலகுவல்ல என்று நான் கருதுகின்றேன் — இவ்வாறு அவர் கூறினார். (எ-6)

# பிரதமராக பதவி ஏற்கும் சந்திரிகா எதிர்நோக்கும் சிக்கலான சவால்கள்

## பி. பி. ஸி.— ஆய்வுரையாளர் கண்ணோட்டம்

"இலங்கையில் பண்டாரநாயக்கா குடும்பம் மீண்டும் அதிகாரத்துக்கு வந்துள்ளது" — என்ற தலைப்பில் பி. பி. ஸி. வானொலியின் ஆய்வுரையாளர் ஜோன் நீட் எழுதிய கண்ணோட்டம் இங்கு பிரசுரமாகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த பத்தாவது நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் தொங்கு நாடாளுமன்றம் ஏற்பட்டதற்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்குத்தான் நன்றி தெரிவிக்க வேண்டும்.

எந்த அரசியல் கட்சியும் நம்பத்தகுந்த பெரும்பான்மையை அடைய முடியாதவாறு, வேண்டும் என்றே சிக்கலான தேர்தல் முறையை அறிமுகப்படுத்தியவர் ஜெயவர்த்தனவே.

விகிதாசாரப் பிரதிநிதித்துவம் என்று சுற்றி வளைத்துக் கொண்டுவரப்பட்டுள்ள ஒரு தேர்தல் முறையால் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு சாதாரண பெரும்பான்மை கிடைக்காமல் போனது அதன் நேச சக்தியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் எதிர்பார்த்ததை விட மோசமான முடிவுகளையே தேர்தலில் சந்தித்துள்ளது. பொதுமக்கள் ஐக்கிய முன்னணி இன்னும் வெற்றி விளிம்பிலேயே உள்ளது.

சிறிய கட்சிகளுக்கு அழைப்புகள் வரத் தொடங்கி விட்டன.

பல ஆண்டுகளாக ஒடுக்கப் பட்டிருந்த, ஒதுக்கப்பட்டிருந்த தமிழ் முஸ்லிம் அரசியல் கட்சிகளுக்கு திடீரென



முக்கிய பங்காற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஆனால், இப்போட்டியில் விடுதலைப்புலிகள் இடம்பெறவில்லை. அவர்கள் தேர்தலை புறக்கணித்தனர்.

இனி புதிய நாடாளுமன்றத்தில் [illegible] வேட்பாளர்கள், வாக்குவாதங்கள் இடம்பெறும். களத்தில் இடம் பெற்ற இரத்தக் களரிகளை விட இது எவ்வளவோ மேல்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆட்சி அமைக்கும் வாய்ப்பே இல்லாது போய்விட்டது.

17 ஆண்டுகளுக்கு பின்னர் பண்டாரநாயக்கா குடும்பம் மீண்டும் ஆட்சிக்கு வந்துள்ளது.

1977இல் நடந்த பொதுத் தேர்தலில் சிறிமாவோ தலைமையிலான சு. க அரசு பதவி இழந்தது. தாம் பிரதமராகப் போவதில்லை என்று அவர் கூறிவிட்டார். அவரது புதல்வி சந்திரிகாவே பிரதமராகிறார்.

சந்திரிகா, பாரீஸில் படித்துப் பட்டம் பெற்றவர். தமது கடந்த கால இடதுசாரிக் கொள்கையைக் கைவிட்டு, மனிதாபிமானத்துடன் கூடிய முதலாளித்துவக் கொள்கை ஒன்றை அமுல் நடத்தப்போவதாக அவர் இப்போது கூறியிருக்கிறார்.

1977 தோல்வியினால் பெற்ற கசப்பான பாடம் பண்டாரநாயக்கா குடும்பத்தினர் உள்ளங்களில் ஆழமாகப் பதிந்து விட்டது எனலாம்.

பிரதமராகும் சந்திரிகா எதிர்நோக்கும் [illegible] ஏராளமானவை ஆகும். சக்திவாய்ந்த [illegible] வாதவர்களை ஜனாதிபதி விஜேதுங்க அமைச்சர்களாக நியமிக்கலாம். சில முக்கிய அமைச்சுக்களை ஜனாதிபதி தம்முடனே வைத்துக் கொள்ளலாம் அப்படிச் சயல்படும்படி ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள சிலர் அவரை வற்புறுத்தலாம்.

ஆனால் அவர் வன்முறையைத் தவிர்க்க ஒழுங்கான ஆட்சி மாற்றத்தையே விரும்பக்கூடும்.

இன்னொரு விஷயம் — நடந்து முடிந்த தேர்தலில ஜனாதிபதியே முதலில் பலியாகி விடவும் கூடும்

எதிர்வரும் டிசம்பரில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தமது வேட்பாளராக விஜேதுங்காவை நிறுத்தாமல் போகலாம்.

திடீர்பொதுத் தேர்தலை நடத்தியதற்காக ஜனாதிபதி மீது ஐக்கிய தேசியக் கட்சியினர் குற்றஞ்சாட்டலாம்.

எப்படியிருப்பினும் — ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் ஆட்சி நடத்துவதைவிட அடுத்த சில மாதங்கள் அரசியல் யுத்தம் ஒன்றை நடத்துவதிலேயே கவனஞ் செலுத்தப்போகின்றன. இதுவே இன்றைய நிதர்சனம் — இவ்வாறு பி. பி. ஸியின் ஆய்வுரைக் கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-3)

# இத்தாலிக்குள் நுழைய 200 இலங்கையர் முயற்சி

## தடுப்பதில் படையினர் தீவிரம்

ரோம், ஓக. 19

இருநூறு வரையிலான இலங்கை நாட்டவர்கள் இத்தாலிக்குள் சட்ட விரோதமாக நுழைய முயற்சித்த சம்பவம் கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அந்த நாட்டின் தென் கரையோரப் பகுதியில் படையினர் ரோந்துப் பணிகளைத் தீவிரப் படுத்தி 'உள்ளனர்' என்று தெரிவிக்கப்படுகிறது.

கடல் வழி மற்றும் வான் வழி ரோந்துப் பணிகளும் தீவிரப் படுத்தப்பட்டிருப்பதாக இத்தாலியின் போக்குவரத்து அமைச்சர் பியூலோ புளோர் தெரிவித்தார்.

## இன்று

ஜெகோவாவின் சாட்சிகளின் மாவட்ட மாநாடு இன்று முதல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும்.

முதல் நாள் நிகழ்ச்சிகள் முற்பகல் 10 - 20 மணிக்கும், அடுத்த இரு நாள் நிகழ்ச்சிகளும் முற்பகல் 9.30 மணிக்கும் ஆரம்பமாகும். (ஐ)

★ ★ ★

கோப்பாய் கோட்டப் பாடசாலை ஆண்டு 2இல் சேவைக் காலப்பயிற்சி வகுப்பில் பங்கு பற்றிய ஆசிரியர்களுக்கான பயிற்சி கொடுப்பனவு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கோப்பாய் கோட்டக் கல்வி அலுவலகத்தில் வழங்கப்படும். (எ)

★ ★ ★

சாவகச்சேரி நகரசபை பொது நூல்நிலைய வாசகர் வட்டத்தின் மாதாந்த அறிவியல் அரங்கு இன்று (வெள்ளி) பிற்பகல் 4 மணிக்கு நகரசபை சபா மண்டபத்தில் நடைபெறும்.

''சித்த வைத்தியமும் சித்தர்களும்' என்ற தலைப்பில் வைத்திய கலாநிதி வசிவப்பு அதில் உரையாற்றுவார். (ஐ-112)

★ ★ ★

நல்லூர் மங்களபதி ஆயுர்வேத மருந்தகமும், வைத்தியசாலையும் ஏற்பாடு செய்துள்ள ஆயுர்வேத மருத்துவ நூல் வெளியீட்டுவிழா இன்று (வெள்ளி) முற்பகல் 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமையில் நடைபெறும். (ஐ-30)

## கலந்துரையாடல்

வடமராட்சிக் கோட்ட கிராமிய உற்பத்திக் குழுக்களுக்கான மாதாந்தக் கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை அல்வாய் சின்னத்தம்பி மகாவித்தியாலயத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும். எனவே வடமராட்சிக் கோட்டத்திற்குட்பட்ட சகல கிராமிய உற்பத்திக் குழு உறுப்பினர்களையும் அதில் கலந்து கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது. (எ)

## சுதந்திரக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக 19

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்களை ஐ.தே. க. ஆதரவாளர்கள் தாக்கினர் என்று சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிறிசேனநாயக்கா ராய்ட்டர் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தார்.

## தேசிய கல்வி நிறுவக பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஓக 19

தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டப் பின்படிப்பு டிப்ளோமா கல்வி நெறியின் பகுதி ஒன்றின் பகுதி இரண்டிற்கான பரீட்சைகள் எதிர்வரும் 23ஆம், 24ஆம், 25ஆம், 26ஆம் திகதிகளில் இங்கு நடைபெறவுள்ளன.

இந்தப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் உரியவர்களுக்கு தபால் மூலம் அனுப்பப்பட்டிருப்பதாக யாழ். வலயம்-1 கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

# கட்சிகளிடையே இனப்பிரச்சினை பிச்சைக்காரனின் புண் போன்றது

கொழும்பு, ஓக. 19

நாட்டில் அரசியல் கட்சிகளுக்கு இடையில் இனப்பிரச்சினை 'பிச்சைக்காரனின் புண்' ஆகவே இருந்து வருகிறது.

டாக்டர் ஜயதேவ உயங்கொட பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சியும், சுதந்திரக்கட்சியும் இனவாதக் கட்சிகளாகவே இருந்து வந்துள்ளன. ஆயினும், சுதந்திரக்கட்சி சிலகாலமாக அரசியல் தீர்வு அவசியம் என்றும் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுத்து வந்துள்ளது.

பாரம்பரியமாக சிங்கள பௌத்தர்களைப் பிரதிநிதித்துவஞ்செய்த சுதந்திரக்கட்சி முன்னைய நிலைப்பாட்டில் இருந்து விலகி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை ஏற்படுத்தவிருப்பது வரவேற்கத்தக்கது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசியல் தீர்வு குறித்து எடுக்கவிருக்கும் நடவடிக்கைகளுக்கு ஐக்கிய தேசியக்கட்சி எவ்வளவு தூரம் ஒத்துழைப்பு நல்கும் என்பது முக்கியமானதாகும். இது குறித்து ஐ. தே. க. கவனமாக சிந்தித்து செயல்பட வேண்டும்; சிறுபிள்ளைத்தனமாகச் செயல்படக்கூடாது. இந்த நாட்டில் உள்ள பெரும்பான்மையினர் இதை உணர மறுக்கின்றனர்! — இப்படி அவர் தெரிவித்தார். (ஐ-எ-6)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று நடக்கும் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக. 19

நல்லூர் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்தை ஒட்டி எட்டாம் திருவிழாவான இன்று ஆலயச் சுற்றாடலில் நடைபெறும் நிகழ்ச்சிகள் வருமாறு:

நாவலர் மணிமண்டப முன்றிலில் தெய்வீக இசையரங்கு—

மாலை 6-7 மணி முதல் ஜெயந்தி செல்லையா இசைக் கச்சேரி

மாலை 7 8 30 மணி வரை எம். வர்ணகுலசிங்கம் இசைக் கச்சேரி

நல்லை ஆதீனத்தில்

காலை 9-30 மணி — சமய திட்டை

பிற்பகல் 2 00மணி - மயப் பேருரை

பிற்பகல் 3-00 மணி - புராணப்படிப்பு

பிற்பகல் 4 மணி செல்வி ம கிருஷ்ணவேணியின் இசைக் கச்சேரி

மாலை 6-7 மணி— பிரம்மபூஷணம் நடேசன்சிவசண்முகமூர்த்தியின் 'கந்தரனுபூதி' பற்றிய இசைப் பேருரை.

போருக்கு வீதியில் உள்ள ஸ்ரீமுத்து விநாயகர் ஆலயத்தில்—

மாலை 5 30 மணி — சம்பூர்ண ராமாயணம் தெய்வீக இசைப் பேருரை '(பாதுகா பட்டாபிஷேகம்'' பிரம்மஸ்ரீ சிவ வை நித்தியானந்த சர்மா. (அ-30)

நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

## எனக்கென்றும் தலைவனடா!

ராகம் - ரஞ்சனி தாளம்:- ஆதி

பல்லவி

கந்தனே கண்கண்ட கடவுளடா - நல்லைக்
கந்தனே எனக்கென்றும் தலைவனடா - தம்பி!
(கந்...)

அனுபல்லவி

செந்தமிழ் தலைவன் தான் கந்தனடா - உயர்
செந்தமிழ் முதல்வன் தான் கந்தனடா - என்றும்
(கந்...)

சரணம்

கற்றவர் அறிவைத் தான் கடவுளென்பார் - பணம்
பெற்றவர் அதனைத் தான் கடவுளென்பார் - கலை
பெற்றவர் கலையைத் தான் கடவுளென்பார் - அருள்
பெற்றவர் குகனைத் தான் கடவுளென்பார் - தம்பி!
(கந்...)

- முருகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

